

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் நடைபெற்ற மாவட்ட அவசரச் செயற்குழுக் கூட்டத்தில் அமைச்சர் – மாவட்ட கழக செயலாளர் கே. ஆர்.பெரியகருப்பன் சிறப்புரையாற்றினார். மேடையில் முன்னாள் அமைச்சர் மூ.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. மாவட்டத் துணைச் செயலாளர்கள் த.சேங்கைமாறன், திருமதி ஜோன்ஸ் ரூசோ, தொகுதி பார்வையாளர்கள் டாக்டர்எஸ்.சுந்தர்ராஜ், நல்ல சேதுபதி, க.சண்முகம், ஆர்.கே.என்.போஸ் ஆகியோர் உள்ளார்கள்.




தேனி மாவட்டம், வீரபாண்டி பேரூராட்சி சேர்மன் கீதா – சசி தம்பதியின் மகள் எஸ்.சகீக்கும், உப்புக்கோட்டை மைக்கேல் – தமிழரசி தம்பதியின் மகன் எம்.பாண்டீஸ்வரன் என்ற ப்ரணவ்விற்கும் தேனி பெரியகுளம் சாலையில் மதுராபுரியில் உள்ள பி.எச்.பி. திருமண மஹாலில் திருமணம் நடைபெற்றது. தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்கதமிழ்செல்வன் எம்.பி. தலைமை வகித்து திருமணத்தை நடத்தி வைத்தார். உடன் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## தமிழகத்தில் ‘S.I.R.’ வாக்காளர் சிறப்பு சீர்திருத்த பட்டியல்

# வாக்குச் சாவடி முகவர்கள் முழுமையாக கண்காணிக்க வேண்டும்!

## செயற்குழுக் கூட்டத்தில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!



சிவகங்கை, நவ. 4 -

சிவகங்கை மாவட்ட கழக அவசர செயற்குழுக் கூட்டம் திருப்பத்தூரில் உள்ள ராஜேஸ்வரி திரு மண மண்டபத்தில் மாவட்ட அவை தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் முன்னிலையில் நடைபெற்றது மாவட்ட கழக துணை செயலாளர்த.சேங்கைமாறன் வரவேற்றுப் பேசினார்.

இந்த கூட்டத்தில் இன்று முதல் 4ம்தேதி நடைமுறைப்படுத்தப்பட உள்ள சிறப்பு வாக்காளர் சீர்திருத்த பட்டியல் சிறப்பு திருத்தம் குறித்து திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்கள் முன்னாள் அமைச்சர் டாக்டர் எஸ்.சுந்தர்ராஜ், க. சண்முகம், ஆர்.நல்ல சேதுபதி, கே.ஆர் .என். போஸ், மாவட்ட துணைச் செயலாளர் த.சேங்கை மாறன், மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் எஸ். பாஸ்கரன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் சசிவர்ணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், முன்னாள் எம்.எல்.ஏ. எஸ்.மாரியப்பன்கென்னடி ஆகியோர் சிறப்பு வாக்காளர் சீர்திருத்த பட்டியல் திருத்தம் குறித்து விளக்கி பேசினார்கள்.

கூட்டத்தில் கலந்து கொண்டு கூட்டுறவுத் துறை அமைச்சர் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கேஆர்.பெரிய கருப்பன் பேசியதாவது.

2026 சட்டமன்ற தேர்தலில் கழக தலைவர் முதல்வர் தளபதி தலைமையிலான இந்தியா கூட்டணி சந்திக்க தயாராகி வருகிறது. தமிழகத்தில் மீண்டும் கழக ஆட்சி வந்துவிடக்கூடாது என்ற நோக்கத்தில் தேர்தல் ஆணையம் , பா.ஜ.க சதியினால் எஸ் .ஐ .ஆர் .வாக்காளர் சிறப்பு சீர்திருத்த பட்டியல் இன்று 4ம்தேதி முதல் ஒரு மாத காலத்திற்கு நடைமுறைப் படுத்த உள்ளது .இதை நாம் எப்படி அணுக வேண்டும் என்று கழக தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் கடந்த 28ஆம் தேதி மாமல்லபுரத்தில் விரிவாக தெளிவுபடுத்தி உள்ளார்கள். இன்றும் இந்த கூட்டத்தில் வாயிலாக இன்னும் முழுமையாக அதை நாம் தெளிவுபடுத்தி உள்ளோம் . இதற்காக இன்னும் தொடர்ந்து பல கூட்டங்கள் நடைபெற உள்ளது. இதில் நாம் நம்மை தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் இந்த எஸ். ஆர் .ஐ. நாம் எதிர்கொள்ள முடியும் . இது ஒன்றும் பெரிய நம்மால் எதிர் கொள்ள இதில் பி .எல். ஏ. 2 வினரின் பணிகள் முழுமையாக உள்ளது. அவர்கள் பி. எல். ஓ வுடன் சேர்ந்து இந்த எஸ். ஐ. ஆர் குறித்து முழுமையாக அவர்கள் ஈடுபட முடியும். அவர்களுடன் பி.எல்.சியும் சென்றால் எந்த தவறும் ஏற்பட வாய்ப்பில்லை. இதை நாம் முழுமையாக கண்காணிக்க வேண்டும்.

முதலில் வெளியூர்களில் வசிப்பவர்கள் ,வேலை பார்ப்பவர்களை வாக்காளராக சேர்த்திடவேண்டும். வெளிநாடுகளில் உள்ள வேர்களை ஆன்லைன் மூலம் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்திட கூறவேண்டும். பீகார் மாதிரி தமிழகத்தில் அவர்களால் செயல்பட முடியாது . காரணம் கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் இதை எதிர்த்து உச்சநீதிமன்றம் வரை செல்ல உள்ளார்கள். கழகத்தலைவர் தளபதி அவர்கள் தேர்தல் ஆணையத்தின் இத்தகைய சதியினை கடிவாளம் போட்டு அடக்கக்கூடிய இயக்கம் கழகமாகும் . தேர்தல் ஆணையம் தரும் விண்ணப்ப படிவங்களை ஒவ்வொருவரும் முழுமையாக பூர்த்தி செய்து தர வேண்டும். அப்பொழுதுதான் நாம் வாக்காளர்களாக சேர முடியும். வாக்களிக்க முடியும் . இதை நாம் முழுமையாக தெரிந்து கொள்ள வேண்டும். வாக்காளர்களுக்கு தெளிவாக கூற முடியும்.

கடந்த 10 தேர்தல்களில் தோற்ற அ.தி.மு.க. பழனிச்சாமி இந்தத் தேர்தலிலும் தோல் விஅடைவது உறுதி. எதற்காக எஸ்.ஐ.ஆரை அவர் ஆதரிக்கிறார் என்பது இதன் மூலமே தெரியும். அ.தி.மு.க. தொடர்ந்து பலவீனமாகி வருகிறது. தேர்தல் வருவதற்குள் எது வேண்டுமானாலும் நடக்கலாம். ஏழாவது முறையாக கழகம் ஆட்சி அமைக்க வேண்டும் .இரண்டாவது முறையாக கழகத் தலைவர் தளபதி அவர்கள் முதல்வராக அமர வேண்டும். ஆனால் நாம் நம்மை பலப்படுத்திக் கொள்ள வேண்டும். நமது கூட்டணி வெற்றி அடைய நாம் இப்பொழுது முதல் களத்தை சந்திக்க வேண்டும். எத்தகைய சவால்களையும் சந்திக்கும் வகையில் தொண்டர்கள் தயாராக வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் பேசினார் .

இந்த கூட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏ.சுப .மதியரசன், பொதுக்குழு உறுப்பினர்கள். பி. ஆர். பெருமாள், பி.டி.ஆர் முத்து , எம்.சோமசுந்தரம், ஆதி. கண்ணா த்தாள், ஏ .ஆர். ஜெயமூர்த்தி, செயற்குழு உறுப்பினர் மேயர் எஸ். முத்துதுரை, நகர் கழக செயலாளர்கள் சி.எம். துரை.ஆனந்த் , க . பொன்னுச்சாமி, பெரி.பாலா, மாநகரச் செயலாளர் துணை மேயர் நா. குணசேகரன், ஒன்றிய கழகச் செயலாளர் கள் எஸ் .சண்முகவடிவேல் விராமதி மாணிக்கம் ,கே.. பாலசுப்பிரமணியன் ,பூமணி, பி. செல்வராஜ், எம். ஜெயராமன், திருமலை முத்துராம லிங்கம் ,பெ.மந்த காளை, எம் .அண்ணாதுரை, அ.முத்துசாமி துரை. ராஜாமணி ,வே. தமிழ்மாறன், கா . வெங்கட்ராமன், வே. ஆரோக்கியசாமி, யோக. கிருஷ்ணகுமார் ,நாகனி ரவி ,வே.பூபால சிங்கம், லெ.மு. ரவிச்சந்திரன், சுப. சின்னதுரை, கே. எஸ் . ஆனந்த், நா.நெடுஞ்செழியன், குன்னக்குடி சுப்பிரமணியன் ,எம் .ஏ. கடம்பசாமி, சுப்பிரமணி யன் ,பேரூர் கழகச் செயலாளர்கள் தி.கதிர்வேல், அசோக், நாகூர் கனி, பி .ஏ .நஜுமுதீன், ராசு,பிரம்மையா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி ராஜ்குமார் , மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில், மகளிரணி நிர்வாகிகள் மார்க் ரெட்கமலா, திலகவதி கண்ணன், பாக்கிய லட்சுமி விஜயகுமார், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் சண்முகநாதன், மாவட்ட செய்தி தொடர்பாளர் அ.அயூப்கான்,,சுற்றுச்சூழல்அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ. வல்லபாய் துணை அமைப்பாளர் குமணன் , மாவட்ட ஆதிதிராவிட நலகுழு அமைப்பாளர் கொத்தமங்கலம் சேது, அமைப்பாளர் சிங்கமுத்து உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.

## நெய்வேலி சட்டமன்ற தொகுதியில்

# “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” சிறப்பு கூட்டம்!

## அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமை! சபா.இராஜேந்திரன் முன்னிலை!

கடலூர், நவ. 4 -

கடலூர் மேற்கு மாவட்டம் நெய்வேலி சட்டமன்ற தொகுதியில் கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஆலோசனைப்படி, தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி, “ஆலோசனைக் கூட்டம் கீழக்கொல்லை தேவி மஹாலில் நடைபெற்றது.

கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ. கணேசன் தலைமை தாங்கினார் .

நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் பேசிய அமைச்சர்; பாக நிலை முகவர்கள் பூத் டிஜிட்டல் ஏஜென்ட் நிர்வாகிகள் கிளை செயலாளர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகளை குறித்து விளக்க உரையாற்றினார் .

மேலும் காணொளி காட்சி வாயிலாக பயிற்சியும் ஆலோசனையும் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் நெய்வேலி தொகுதி பார்வையாளர் பா.துரைசாமி ,திட்டக்குடி தொகுதி பார்வையாளர் சுபா.சந்திரசேகர் பொதுக்குழு உறுப்பினர் பொ. புகழேந்தி ,குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் அ.குணசேகரன் பண்ருட்டி வடக்கு ஒன்றிய செயலாளர் ஆர். சந்தோஷ்குமார் மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் பழனி.சுரேஷ் ஒன்றிய அவை தலைவர் ஆ.ராஜா , மாவட்டப் பிரதிநிதிகள்ஜி. ஆடலரசன் கே.எம்.ஜெகநாதன் ,

ஒன்றிய துணை செயலாளர் செல்வகுமார் ஒன்றிய பொருளாளர் ஐயப்பன் துணை செயலாளர் ஏழுமலை, ஒன்றிய அவைத்தலைவர்,வீர.ராமச்சந்திரன் ,பொருளாளர் ஆனந்த ஜோதி மாவட்டப்பிரதிநிதி இராம.வெங்கடேசன், நகர அவைத் தலைவர் நன்மாறப்பாண்டியன், நகர கழக நிர்வாகி கள் கருப்பன், மதியழகன் ,ரவிச்சந்திரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜேஷ் , மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர்.ராஜேஷ் , மாவட்ட ஆதிதிராவிடர் துணை அமைப்பாளர் ஆறுமுகம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கிளைக் கழக செயலாளர்கள் பாக நிலை முகவர்கள் பூத் டிஜிட்டல் ஏஜென்ட் நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## தேனி வடக்கு மாவட்டம்

# வீரபாண்டி பேரூராட்சி தலைவர் கீதா - சசி இல்ல மண விழா!

## கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்!

தேனி, நவ. 4 -

தேனி மாவட்டம், வீரபாண்டி பேரூராட்சி சேர்மன் கீதா சசி - சசி தம்பதியின் மகள் எஸ்.சகீக்கும், உப்புக்கோட்டை மைக்கேல்- தமிழரசி தம்பதியின் மகன் எம்.பாண்டீஸ்வரன் என்ற ப்ரணவ் விற்கும் தேனி அருகே பெரியகுளம் சாலையில் மதுராபுரியில் உள்ள பிஎச்பி திருமண மஹாலில் திருமணம் நடைபெற்றது.

தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தங்கதமிழ்செல்வன் எம்.பி தலைமை வகித்து திருமணத்தை நடத்தி வைத்தார். விழாவிற்கு தேனி தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் ரத்தினசபாபதி முன்னிலை வகித்தார். விழாவில் கலந்து கொண்டவர்களை வீரபாண்டி பேரூராட்சி சேர்மன் கீதா சசி - சசி தம்பதி, உப்புக்கோட்டை மைக்கேல் - தமிழரசி தம்பதி வரவேற்றனர்.

விழாவில், பெரியகுளம் தொகுதி எம்.எல்.ஏ சரவணக்குமார், திமுக தீர்மானக்குழு இணை செயலாளர் ஜெயக்குமார், உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எல்.மூக்கையா, தேனி வடக்கு மாவட்ட தி.மு.க. அவைத் தலைவர் பி.டி.செல்லப்பாண்டியன்,தேனி வடக்கு மாவட்ட தி.மு.க. துணை செயலாளர்கள் ராசிசெந்தில், திருக்கண்ணன், மாவட்ட பொருளாளர் சுரேஷ், ஒன்றிய செயலாளர்கள் போடி மேற்கு முன்னாள் எம்.எல்.ஏ லட்சுமணன், போடி கிழக்கு அய்யப்பன், பெரியகுளம் வடக்கு எல்.எம்.பாண்டியன், சின்னமனூர் மேற்கு முருகேசன், திமுக நகரச் செயலாளர்கள் பெரியகுளம் முகமது இலியாஸ், தேனி தெற்கு நாராயண பாண்டியன், போடி புருஷோத்தமன், தேனி வடக்கு நகர பொறுப்பாளர் பாலமுருகன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சங்கர், முருகேசன், பொதுக்குழு உறுப்பினர் தெய்வேந்திரன், வீரபாண்டிபேரூர் செயலாளர் செல்வம். பேரூராட்சி தலைவர்கள், சேர்மன்கள் ஆண்டிபட்டி பொன் சந்திரகலா ..பூதிப்புரம் கவியரசு, வடுகபட்டி நடேசன், தாமரைக்குளம் பால்பாண்டி, தென்கரை நாகராஜன், கெங்குவார்பட்டி தமிழ்செல்வி, தேவதானப்பட்டி முருகேஸ்வரி ராமையா, போடி மீனாட்சிபுரம் திருப்பதி, மேலச் சொக்கநாதபுரம் கண்ணன், பல்வேறுத் துறை அரசு அதிகாரிகள், பேரூராட்சி செயல்அலுவலர்கள், தேனி வடக்கு மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், கிளைக்கழக நிர்வாகிகள், வணிகர்கள், உறவினர்கள், நண்பர்கள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

## ‘என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி’

# தீவனூரில் வாக்குச் சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கினார்!

மைலம், நவ. 4 -

என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி முன்னெடுப்புடன் வாக்குச்சாவடி முகவர்கள், டிஜிடல் பூத்ஏஜென்ட்கள் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தில் தீவிர கவனம் செலுத்தி பணியை மேற்கொள்ள வேண்டும் என தீவனூரில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர், விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கேட்டுக்கொண்டார்..

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மைலம் சட்டமன்றத் தொகுதி மைலம் வடக்கு, ஒலக்கூர்மேற்கு ஆகிய ஒன்றி திமுக சார்பில் வாக்குச்சாவடிமுகவர்கள், பூத் டிஜிடல் ஏஜன்ட் நிர்வாகிகள்கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் தீவனூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

ஒன்றிய அவைத் தலைவர்கள் இ.சேகர், அமராவதி ஆகியோர் தலைமையில் மைலம் சட்டமன்றத் தொகுதி தேர்தல் மேற்பார்வையாளர் இள.புகழேந்தி முன்னிலையில் மைலம் வடக்குஒன்றிய செயலாளர் மணிமாறன், ஒலக்கூர் மேற்கு ஒன்றிய செயலாளர் ராஜாராமன் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றகூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.

கூட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசுகையில்:

தி.மு.க. நிர்வாகிகள் அனைவரும் கவனம் செலுத்தி திமுக ஆட்சியில் முதலமைச்சர் செய்த சாதனைகளை ஒவ்வொரு வீடாக எடுத்து சொல்லி வாக்குகள் சேகரிக்க வேண்டும் ,செஞ்சி மயிலம் திண்டிவனம் ஆகிய மூன்று தொகுதிகளிலும் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் மாபெரும் வெற்றி பெறுவதற்கு அனைவரும் கடுமையாக உழைக்கவேண்டும்.

பீகார் மக்கள் தமிழ்நாட்டில் அவமதிக்கப்படுகிறார்கள் என பீகார் தேர்தல் பிரச்சாரத்தில் தவறாக தெரிவித்துள்ளபிரதமர் மோடிக்கு தமிழ்நாட்டில் கழகத் தலைவர் மு. க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில்தான் பீகார் உள்ளிட்ட பிற மாநிலத்தை சேர்ந்த மக்கள் நிம்மதியாக வாழ்ந்துவருவதாக விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்..ஏ. உறுதிபட தெரிவித்தார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், செந்தமிழ்ச்செல்வன், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர்,தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் முன்னிலையில், சங்கராபுரம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் அசோக்குமார் மற்றும் ரங்கப்பனூர் ஊராட்சி மன்ற தலைவர் அர்ச்சனா காமராஜன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் காமராஜன் ஆகியோர்களின் ஏற்பாட்டில், ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதி, சங்கராபுரம் வடக்கு ஒன்றியம், ரங்கப்பனூர் ஊராட்சியை சேர்ந்த பாஜக, தவெக, நாதக ஆகிய மாற்றுக் கட்சியினர் 100க்கும் மேற்பட்டோர் நமது திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர், புதிதாக கழகத்தில் இணைந்த மாற்றுக் கட்சியினருக்கு மாவட்டக் கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ கழக இரு வண்ண வேஷ்டிகளை அணிவித்து அன்புடன் வரவேற்று தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வேதாரண்யம் செ.யூசுப்
### நவம்பர் 4 (2013)



பள்ளிப் பருவத்திலிருந்தே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு வேதாரண்யம் பகுதியில் கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் இவரும் ஒருவர்.

திருத்துறைப்பூண்டி வட்டக் கழக துணைச் செயலாளராகவும், 25 ஆண்டுகள் தொடர்ந்து வேதாரண்யம் ஒன்றியக் கழகச் செயலாளராகவும், தலைமை செயற்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைக் கழக பேச்சாளராகவும் திறம்பட பணியாற்றியவர்.

இரண்டு முறை நாகை மாவட்ட ஊராட்சி மன்றத் துணைத் தலைவராகப் பணியாற்றி வேதாரண்யம் பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

1964ல் நடைபெற்ற மொழிப் போராட்டத்திலும், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**